**அ.வ. எண்: 122/2021** **நாள்: 08.12.2022**

நீலகிரி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் 2022ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் 08ம் நாள் வாதி எஸ்.சுஹாஷினி என்பவரின் சாட்சியம் PW1 வாக்குமூலம் 1969ம் ஆண்டு 44வது சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி. பி.ரேகா, உதவியாளர் நிலை 3 என்பவரால் ஆணையிட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு உறுதி செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : எஸ்.சுஹாஷினி | தொழில் | : துணிக்கடையில் பணிபுரிகிறேன் |
| தந்தை/கணவர் பெயர் | : சுந்தரதாஸ் | சமயம் | : கிறிஸ்தவர் |
| கிராமம் | : உதகை | வயது | : 40 |
| தாலூக்கா | : உதகை | சாதி | : கிறிஸ்தவர் |

---

**முதல் விசாரணை :**

நான் இந்த வழக்கின் வாதி ஆவேன். நான் இன்று முதல் விசாரணை சாட்சியத்தினை நிரூபண ஆணையுறுதி ஆவணமாக தாக்கல் செய்கிறேன். ஆணையுறுதி ஆவணத்தில் கண்டுள்ள சங்கதிகளைப் பார்த்து கேட்டு தெரிந்து கொண்டேன். அவைகள் யாவும் சரியானவை என்று நான் உறுதி கூறுகிறேன். வழக்குரையில் கேட்டுள்ள பரிகாரங்கள் வழங்கி தீர்ப்பு செய்யுமாறு பணிவுடன் பிரார்த்திக்கிறேன்.

வாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க ஆவணங்களை குறியீடு செய்வதற்காக ஒத்தி வைக்கப்படுகிறது.